முருகப்பெருமான் துணை

**மகான் கோச்செங்கட் சோழ நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.07.2022, திங்கட்கிழமை

1. அறமாக வந்த அரங்க ஞானியே
அண்ணலாக அவதாரம் எடுத்த மாதவசியே
வரமென அருளாசி தனை இனிதே
அருளுவேன் சுபகிருது நள்ளி திங்கள்
2. திங்களிலே உபய திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 02 நாள், 18.07.2022 திங்கட்கிழமை)
தேசிகனுக்கு கோச்செங்கட் சோழ நாயனாரும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்காரக்குடில் அமைத்து அருளுகின்ற
3. அருளுகின்ற அரங்கமகா ஞானியரின்
ஆற்றல்மிக்க ஞான உபதேசங்களை
அருளாக வரமாக உலகமக்கள் ஏற்று
அணுகியே வணங்கி வருதல் காண
4. வருதல்காண மக்களிடை மாற்றமும்
வல்லமையும் ஞானபலமும் கூடும்
தர்மத்தை ஏற்று செய்துவர
தரணியில் மக்களுக்கு தெளிவுகூடி
5. கூடியே தரும ஞான பலமோடு
குரு அரங்கன் அருள்தயவும் கூடி
நாடிடும் குருவருள் திருவருள் ஆகவே
நாடெங்கிலும் தர்மவான்கள் எனும் சக்தி
6. சக்திபெருகி இந்த கலியுகமும்
சற்குரு அரங்கன் ஆசியாலே
சக்திமிகு ஞானயுகமாக மாறி
சடாட்சரன் வழிபாடு எங்கும் பரவி
7. பரவியே மக்களுக்கு நல்ல பாதுகாப்பு
பரிபக்குவமான நிலைகள் பெருகி
துறவி அரங்கன் வழிகாட்டலில்
தெய்வ ஞான பூமியாக உலகம் மாறும்
8. மாறுதலும் நல்ல மகத்துவமும் தருகின்ற
மாதவசி தொண்டர் படைகளை நிறுவி
ஆறுமுகப் பெருமான் வழிபாட்டை பெருக்கி
அகிலமே அமைதி பயன்பெறும் வண்ணம்
9. வண்ணமுடன் சேவைகள் நிறைந்த
வளர்ச்சி வல்லமையும் நிறைந்த நல்
மண்ணுலகை உருவாக்கி இனிதே
மாதவசி வந்த நோக்கம் பூர்த்தியாகும்

10. ஆகவே ஆன்மீக ஞானவழி எனும்
அரங்கன் சன்மார்க்க வழி கொண்டே
ஜெகமெங்கும் அற்புதம் நிகழக் கூடும்
சித்தர்கள் ஞானிகள் வெளிப்பாடு மிகுந்து

11. மிகுந்து ஞான சித்தர் ஆட்சிக்காலம்
முருகப்பெருமான் தலைமை கொண்ட காலமாக
மிகுந்து உலகினில் ஞான ஆட்சி மலரும்
மொழிந்திட்ட அருளாசி முற்றும் முற்றே

–சுபம்–